STC.No.693/2021
Name:சதீஷ்ராஜன்
PW.1
Dated:22.01.2024

சாட்சி அழைப்பாணையின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டது.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் 317 மனு தாக்கல் செய்யப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை</u>

1)நான் பார்சூன் பைரோடெக் என்ற பெயரில் பட்டாசு டிரேடிங் வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியை அவரது கணவர் மூலம் தான் தெரியும். பலதடவை எதிரியை சந்தித்துள்ளேன். எதிரியின் கணவர் பட்டாசு ஏஜெண்டாக வேலை பார்க்கிறார். அதன் அடிப்படையில் என்னிடமும் பட்டாசு வாங்கி வியாபாரம் செய்து வந்தார். நானும், எதிரியும் வழக்கிற்கு முன்பு ஐந்து வருடமாக தொழில் செய்து வந்தோம். இந்த வழக்கிற் கு பின்னர் எனக்கும் எதிரியின் கணவரும் இடையே வியாபாரம் இல்லை என்றால் 2022 ம் வருடம் வரை இருந்தது.

2) 01.09.2020 ம் தேதி அன்று எதிரி என்னிடம் ரூ-1,00,000/- கைமாற்றாக வாங்கியதாக எனது வழக்கு என்றால் சரிதான். 01.09.2020 ம் தேதிக்கு பின்னர் எதிரியின் கணவரை எத்தனை முறை சந்தித்துள்ளேன் என்றால் பலமுறை சந்தித்துள்ளேன். 03.08.2021 ம் தேதியன்று எதிரி என்னிடம் காசோலை கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். எனக்கு எத்தனை வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் ஐந்து வங்கிகளில் கணக்குகள் உள்ளது. எனது GPay எண்ணை கனரா வங்கியில் இணைக்கப்பட்டுள்ளது. 9943658552 எண்ணுடைய எண் என்றால் சரிதான். அதில் GPay இணைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் மேற்படி எண்ணிலிருந்து 06.11.2020 தேதியன்று ரூ.50,000/-ம்,

12.11.2020 ம் தேதியன்று ரூ-16,500/- மற்றும் 28.12.2020 ம் தேதியன்று ரூ.20,000/-ம் எதிரியின் கணவர் எனக்கு செலுத்தியுள்ளார் என்றால் வியாபாரம் ரீதியாக செலுத்தியிருப்பார். மேற்படி வியாபார ரீதியாக கொடுத்தார் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எதிரி வாங்கி ய தொகைக்காக தான் மேற்படி பணமானது செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் இடத்திலிருந்து முன் கூட்டியே வாங்கிவைத்திருந்த காசோலையை பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) எதிரி சுமார் 6 அடி இருப்பாரா என்றால் துல்லியமாக சொல்ல இயலாது. காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் என்னுடன் யார் இருந்தார் என்றால் எனது மனைவி மட்டும் தான் இருந்தார் வேறு யாரும் இல்லை. கடன் வாங்கியதாக சொல்லப்படும் தேதியன்று எதிரியுடன் அவரது கணவர் இருந்தாரா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரி எந்த காலத்திலும் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும், காசோலை வழங்கவில்லை என்றும், எதிரியின் கணவரிடமிருந்து காசோலையை பெற்று இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன்என்றால் சரியல்ல.

4) எதிரியிடமிருந்து பணம் வாங்கிய விவரத்தை அவரது கணவரிடம் கூறினேனா என்றால் எதிரி சொல்ல வேண்டாம் என்று சொன்னதால் நான் சொல்லவில்லை. மேற்படி விவரத்தை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும், அவ்வாறு பணம் வாங்கியிருந்தால் கால தாமதமாக காசோலையை கொடுத்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. எதிரி வாங்கி பணத்தை மூன்று மாதத்தில் திருப்பி

தருவதாக கூறினார் என்றால் சரிதான். எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த காலத்திலும் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.